


09.10. 2024

<u>தலைப்புச்செய்திகள்</u>

1. பாரம்பரிய ஆயுர்வேத மருந்து நிறுவனங்களை நாட்டில் தொடங்க இளையோர் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. மஹாராஷ்டிர மாநிலத்தில் 7 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் திரு.நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டிள்ளார்

3. தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உதவியுடன் அரசு பள்ளிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்

4. தென்கிழக்கு அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாகி உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 2-வது 20-20 கிரிக்கெட் போட்டி இன்றிரவு 7 மணிக்கு புதுதில்லியில் நடைபெறுகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

<u>குடியரசு தலைவர்</u>

ஆயுர்வேத பிரிவின் பாரம்பரிய மருந்து நிறுவனங்களை நாட்டில் தொடங்க இளையோர் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய ஆயுர்வேத நிறுவனத்தின் 8-வது ஆண்டு விழாவில் இன்று உரையாற்றிய அவர், மக்களின் வாழ்க்கையில் ஆயுர்வேதம் முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

தரம் வாய்ந்த ஆயுர்வேத மருத்துவர்களின் தேவையை எடுத்துரைத்த அவர், இதன் மூலம் போலி மருத்துவர்களிடம் மக்கள் ஏமாறுவது தவிர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டார்

கடந்த சில ஆண்டுகளாக ஆயுர்வேத கல்லூரிகளில் மாணாக்கரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை சுட்டிக்காட்டிய அவர், வருங்காலங்களில் இப்பிரிவில் மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றார்.

ஆயுர்வேத பிரிவில் ஆராய்ச்சிகளும், வளர்ச்சியும் அவசியம் என்று குடியரசு தலைவர் தெரிவித்தார்.

மத்திய ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

□□□□□□□

<u>பிரதமர்</u>

மஹராஷ்டிர மாநிலத்தில் 7 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி காணொலி வாயிலாக இன்று அடிக்கல் நாட்டினார்

நாக்பூரில் தரம் மேம்படுத்தப்பட்ட டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் சர்வதேச விமானநிலையம்,

ஷிரடி விமான நிலையத்தில் புதிய ஒருங்கிணைந்த முனையம் ஆகியவை இதில் அடங்கும்.

தொடர்ந்து அம்மாநிலத்தில் 10 அரசு மருத்துவ கல்லூரிகளின் செயலாக்கத்தையும் அவர் துவக்கி வைத்தார்.

உலகளாவிய திறன்மேம்பாட்டு முன்னோடி நாடாக இந்தியாவை உருவாக்கும் தொலைநோக்கு திட்டத்தின்கீழ் மும்பையில் இந்திய திறன் மேம்பாட்டு நிறுவனத்தையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இதனிடையே பிரதமர் 21-வது ஆசியான் - இந்தியா உச்சிமாநாடு மற்றும் 19-வது கிழக்காசிய மாநாட்டில் பங்கேற்க நாளை லாவோஸ் நகரின் வியன்டியான் நகருக்கு செல்கிறார்.

இதனொரு பகுதியாக அந்நாட்டு பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் அவர் மேற்கொள்கிறார்.

□□□□□□□

<u>ரிசர்வ் வங்கி</u>

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகியகால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 6.5 சதவிகிதமாக தொடர்ந்து நீடிக்கும் என்று வங்கியின் ஆளுநர் திரு. சக்திகாந்ததாஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் வங்கியின் இருமாத நிதி கொள்கையை வெளியிட்டு பேசியஅவர், அதேபோல் வங்கியின் நிலையான வைப்புத் தொகை விகிதம் 6.25 சதவிகிதமாக தொடர்ந்து பராமரிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

2023-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து ரெப்போ வட்டி விகிதத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் தொடர்ந்து பராமரிக்கப்படுவதாக அவர் கூறினார்.

வளர்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கு நடுநிலைமையுடன் நிதிக் கொள்கையை முன்னெடுத்துச்செல்ல நிதிக்குழு முடிவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நுகர்வோர் விலை குறியீட்டிற்கான பண வீக்க விகிதம், 4 சதவிகிதமாக இருப்பதை நோக்கமாகக் கொண்டு இம்முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

□□□□□□□

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் வேளாண் அலுவலர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 83 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று வழங்கினார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 42 பேருக்கும் பணிக்கான ஆணைகளையும் அவர் வழங்கினார்.

தென்காசி, சிவகங்கை, திருப்பூர் மாவட்டங்களில் 2 கோடியே 60 லட்ச ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள விடுதலை போராட்ட வீரர்கள் வெண்ணி காலாடி, குயிலி, எத்தலப்பர் நாயக்கர் சிலைகளையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

□□□□□□□

தங்கம் தென்னரசு

சாம்சங் நிறுவன தொழிலாளர்கள் நலனை தமிழ்நாடு அரசு பாதுகாக்கும் என்று மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழிலாளர்கள் பிரச்சனை தீர்ப்பதிலும், அவர்களது வேலைவாய்ப்பை உறுதி செய்வதிலும் அரசு தனி கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

தொழிலாளர்களுக்கு கூடுதல் விடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை சாம்சங் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறிய அவர், இம்மாதம் முதல் மாத ஊதியத்துடன் சிறப்பு ஊக்கத் தொகையாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கவும் ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

□□□□□□□

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பள்ளிகளில் ஆசிரியர்களும், உடற்கல்வி ஆசிரியர்களும் நியமனம் செய்யப்படுவார்கள் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

முன்னதாக வேலூர் மாவட்டம் குடியாத்தம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியை இன்று ஆய்வுசெய்த அமைச்சர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அரசு பள்ளிகளுக்கு விரைவில் கொண்டுவரப்படும் என்றார்.

கிராமப்புற பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளின் உள்கட்டமைப்புகளை பாராட்டிய அவர், மாணாக்கர் இலகுவாக கற்பதற்கு ஏற்றவகையில் கல்வி எளிமையாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

முன்னதாக ராணிப்பேட்டை மாவட்டம் ராஜீவ்காந்தி நகரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை ஆய்வுசெய்த அவர், மாணாக்கருக்கு வழங்கப்படும் காலை உணவின் தரத்தை கேட்டறிந்தார்.

□□□□□□□

சேகர்பாபு

திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், சுவாமிமலை, வயலூர் முருகன் திருக்கோவில்களில் ஆயிரத்து 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பெருந்திட்ட வளாக பணிகள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், திருச்செந்தூரில் கடல் அரிப்பை தடுக்க 20 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப் படுவதாக குறிப்பிட்டார்.

இயற்கை சீற்றங்களின் போது பக்தர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் ஆய்வுசெய்யப்பட்டு வருவதாகவும் கூறினார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக திருக்கோவில் வளாகத்தில் 48 கோடிரூபாய் செலவிலான விடுதி கட்டடப் பணிகளை அமைச்சர் இன்று ஆய்வு செய்தார்.

□□□□□□□

கலந்தாய்வு

தமிழ்நாட்டில் ஆதிதிராவிட நலத்துறை பள்ளிகளில் பணி நிரவலில் இடமாறுதல் கோரும் ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு வரும் 16-ம் தேதி நடைபெறுகிறது.

5 ஆண்டுகளுக்குமேல் விடுதியில் பணிபுரியும் காப்பாளர்களுக்கான கலந்தாய்வு வரும் 24-ம் தேதி நடைபெறும்.

தகுதியுடையவர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

□□□□□□□

திருச்சி வாய்ஸ்

திருச்சி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு தனித்துவ அடையாள அட்டை வழங்கும் வகையில், மருத்துவர்களுக்கான புத்தாக்க பயிற்சியை ஆட்சித் தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று தொடங்கி வைத்தார்

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தை விரிவுபடுத்த சிறப்பு மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□

தபால் வார விழா - வாய்ஸ்

காஞ்சிபுரம் தலைமை அஞ்சலகத்தில் தேசிய தபால் வார விழாவை ஒட்டி கடந்த 7-ம் தேதி முதல் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளை பல்வேறு பள்ளி மாணாக்கர் பார்வையிட்டு வருகின்றனர்.

அஞ்சலகத்தின் திட்டங்கள் பயனுடையதாக உள்ளதாக பள்ளி மாணவி தெரிவிக்கையில்,

… வாய்ஸ் …

□□□□□□□

<u>வானிலை</u>

தென்கிழக்கு அரபிக்கடலில் லட்சத்தீவை ஒட்டிய பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அடுத்த 3, 4 தினங்களில் வலுவடையும் இம்மையம் கூறியுள்ளது.

இதனிடையே குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும்,

இலங்கை மற்றும் அதனை ஒட்டிய பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும் நிலவுகிறது.

இதன் தாக்கத்தால் தமிழ்நாட்டில் அநேக இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு பரவலாக மழை பெய்யும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், கரூர், திருச்சி, திண்டுக்கல் மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

□□□□□□□

<u>கிரிக்கெட்</u>

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 2-வது 20-20 கிரிக்கெட் போட்டி இன்றிரவு 7 மணிக்கு புதுதில்லியில் நடைபெறுகிறது

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

□□□□□□□

<u>மகளிர் கிரிக்கெட்</u>

ஐ.சி.சி மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் துபாயில் இன்றிரவு ஏழரை மணிக்கு இந்தியா - இலங்கையுடன் மோதுகிறது.

□□□□□□□